**கூட்டுறவு மிகை நிதியம் - 2023**
---------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்களுடனான நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கைகளில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணகீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்துவிடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவமானது பொருண்மையான பிறழ் கூற்றிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அப்பிப்பிராயத்தினை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதியம் ஆரம்பத்திலிருந்து வருமானவரி செலுத்தாதிருந்ததுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து வரிக்கு உட்படாத ஒரு நிறுவனம் என உறுதிப்படுத்திக்கொள்ளாது நிலையான வைப்புக்காகப் பெற்ற வட்டியின் அடிப்படையில் நிறுத்திவைத்தல் வரி 2017 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 396,847 தொகையும் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 9,909,040 தொகையும் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது. | பிரச்சினையை தீர்த்துவைத்துக்கொள்வது சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வரிக்கு உட்படாதது என உறுதிப்படுத்திக் கொண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை | நிச்சயமற்றதாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கல் கணக்கு | 9,475,735 | 11 ஆண்டுகளுக்கு மேல் | தகவல்களைத் தேடிப் பார்க்கும் சிக்கலின் அடிப்படையில் தீர்த்துவைத்தல் தாமதமடைந்துள்ளது. | மீதியை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | நிச்சயமற்றதாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கிடைக்க வேண்டிய கூட்டுறவு சங்க கடன் | 532,703,857 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் உறுதிப்படுத்தலினை வழங்குமாறு உரிய சங்கங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய பணம் | 5,029,486 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | கிடைக்க வேண்டிய துணைக் கடன் | 81,871,370 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | செலுத்த வேண்டிய திறைசேரி நிதி | 150,000 | விபரமான பட்டோலை | நீண்டகாலமாக காணப்பட்டுவரும் மீதியை கணக்குகளிலிருந்து நீக்குவதற்காக அமைச்சிடமிருந்து ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. | விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 3,871,256 | விபரமான பட்டோலை | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பொது வைப்புக் கணக்கு | 8,439,910 | விபரமான பட்டோலை | உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (எ) | நிலையான வைப்பு பிணை கடன்கொடுத் தோர் | 58,918,112 | கடன்கோவை மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | தேடிக்கண்டுபிடிக்கும் சிக்கலின் அடிப்படையில் தீர்த்துவைப்பதில் பிரச்சினை காணப்பட்டது. | மீதிகளின் உறுதிப்படுத்தலினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கலைத்தல் கணக்குகள் (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைத்தல் கணக்கின் பிரதி | -மேற்படி- | -மேற்படி- |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) செயற்பாடற்ற கடன் பட்டோலையின் பிரகாரம் 1989 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிதியத்திலிருந்து 69 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 125,231,173 கடன் பணத்தில் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 87,986,525 மீதி அறவிட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாடிற்கான கடன் தவணைப் பணமாக ரூபா 1,024,971 மாத்திரம் கிடைத்திருந்தது. 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 102,215,361 கடன் வட்டியில் ரூபா 497,630 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. | 06 கடன் வகைகளை மீள்பட்டியல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்வேறு சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டு காணப்படுகின்ற ரூபா 1,721,566 தொகையான மதிப்பிழந்த காசோலை மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை தீர்த்துவைப்பது சம்பந்தமாக அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு விசாரித்து கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | மதிப்பிழந்த காசோலை மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய ரூபா 221,235,967 கடன் வட்டியில் ஆண்டின் போது ரூபா 11,184,856 மாத்திரம் கிடைத்திருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கிய கடன் ஆனதுடன் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 513,936,249 பணத்தில் அடுத்துவரும் ஆண்டுகளின் போது அறவிட வேண்டிய கடன் தவணைப் பணங்களும் காணப்படுகின்றன. | கடன் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முன்னுரிமையளித்து ஒரு சிறப்பு விற்பனைக் கடைக்கான ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கும் விற்பனைக் கடையை ஆரம்பிப்பதற்குமாக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 15,587,000 வட்டி இல்லாக் கடன் 20 ஆண்டுகளுக்குள் செலுத்தி பூர்த்திசெய்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. கடன் பணம் வழங்கி 16 ஆண்டுகள் கடந்திருந்தும் அறவிடப்பட்ட பணம் ரூபா 737,250 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிட வேண்டிய மீதி ரூபா 14,849,750 ஆக இருந்தது. | இச்சங்கத்தை கலைப்பதற்கான ஆரம்ப கட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு 2013 ஆம் ஆண்டின் போது வழங்கிய ரூபா 75,000,000 கடன் பணத்தில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 62,091,372 பணம் அறவிட வேண்டியிருந்ததுடன் அதற்காக அறவிட வேண்டிய வட்டி ரூபா 85,435,460 ஆகும். 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கடன் பணம் வழங்கி 11 ஆண்டுகள் கடந்திருந்தும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலுவைக் கடனையும் வட்டியையும் அறவீடு செய்தலினை அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ள முடியவில்லையாயின் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்குமாறு 2021 அகஸ்ட் 05 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது பணிப்புரை வழங்கப்பட்டிருந்ததுடன் 2 ½ ஆண்டுகள் கடந்திருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவீடு செய்வதற்கு தொடர்ச்சியாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கும் வரையறுத்த கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டது. | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கும் கணக்குகள் குழுவின் பணிப்புரையை அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் நானாவித பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த மிகை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,017,551 தொகையான மீதியை 1987 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதிகளைத் தீர்த்துவைப்பது சம்பந்தமாக அமைச்சிற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் கீழ் 2009 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் மிகை அறவீடுகள் ரூபா 196,201 தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் கணக்கு மாற்றல் ரூபா 100,000 மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகை அறவீடுகள் ரூபா 196,201 இனை உறுதிப்படுத்துவதற்காக உரிய சங்கத்திற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் பதில் கிடைத்திருக்காததுடன் கணக்கு மாற்றல் ரூபா 100,000 பணம் சம்பந்தமான விபரத்தை தேடிப்பார்த்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் யூன் மாத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை ரூபா 06 மில்லியனிலிருந்து ரூபா 05 மில்லியன் வரையான வீச்சல் கையில் மிகுதிப் பணம் வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை வினைத்திறனான முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதத்தின் இறுதியில் கையிலுள்ள பண மீதியினை கவனித்து பார்த்து முதலீடு செய்தலானது அடுத்துவரும் மாதத்தின் போது மேற்கொள்ளப்படும். முதலீடு செய்தலினை மேலும் வலுப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பணத்தை வினைத்திறனாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 441,430,472 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 230,070,179 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 211,360,293 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு வட்டி வருமானம் ரூபா 146,320,337 ஆல் அதிகரித்தல் மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 63,853,913 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரம் கடன் வழங்கப்படலாம் என அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்பட்டிருந்தும் அதற்கு முரணாக கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 13,969,497 தொகையான வட்டியில்லாத கடன் வழங்கப்பட்டிருந்தது. | கடனை அறவீடு செய்வதற்கு 2023 ஒக்தோபர் 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அந்த நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |